உ

கடவுள் துணை.

# மதுரைவீர அலங்காரம்



காப்பு—விருத்தம்.

உன்னிதமாங்காசிநகர் தன்னையாளும்
உத்தமனாந்துளசிமகா ராஜன்பெற்ற
மன்னவனாமமதுரையெனும் வீரன்மீது
மகிழ்ந்துமேஅலங்காரந் தன்னைவோத
தென்னவனைவிழவுதைத்தோன் மகனாய்வந்த
திருமாலின்மருமகனாய் விளங்குகின்ற
முன்னவனாங்கணபதியை முடிமேற்சாற்றி
முற்றமிழோரடிவணங்கி முறையிட்டேனே.

இவை - செஞ்சி

ஏகாம்பரமுதலியாராலியற்றப்பட்டு,

ஆ-இரத்தினவேலுமுதலியாரது
வாணிவிலாஸ அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1898

தெம்மாங்கு) பிள்ளையில்லாததினால் பிரியமுடன் தவமிருந்து
வள்ளலுடகிருபையாலே வரம்பெற்றானே காசிராஜன் (நன்)
சூரியன்போலேகுழந்தைபிறந்தான் சோதிடர்களை அழையுமென்றான்
பேரிட்டழைக்கமனதில்நினைத்தான் பிறந்தநாளைபாருமென்றான்
ஆயிரஞ்சோதிடர்கணிதமெடுத்தார் அணுவுந்தப்பாமல்சரியாபார்த்
கூவியுரைக்கமனதுநொந்தார்குரிகிதலையைகுனிந்துகொண்டார்[தார்
அரசன்பார்த்துஅதட்டியழைத்தா னிருக்குஞ்சேதியெடுங்களென்றா
(சோதிடர்-தெம்)மாலைசுத்திபிறந்ததினால் மாமனுக்கு ஆகாதையா
கொடியுடனேபிறந்ததினால் கோத்திரங்களழியுமையா
(ஐயா)பிள்ளைகவலைதள்ளுமையா பெற்றோமென்றுநினைக்காதையா
கொல்லவந்தயமனையா கொண்டுபோய்காட்டில்விடுங்களையா
(ஐயா)ஆசைகொண்டு அலையாதையா அரண்மனையிலே வைக்காதையா
காசியழிந்துபோகுதையா கணிதநூலையுரைத்தோமையா
(ஐயா)சீக்கிரமெடுங்கசெல்லவிடுங்கபிள்ளையைமறந்துபொறுத்துயிரு
(தெ)பொருங்களென்றுசொன்னவுடன் புரண்டழுதுகாசிராஜன்[ங்க
வருத்தமொடுதாதுவனாவனத்தில்விட்டுவாங்களென்றான் (நன்)
ஐயா-தங்கச்சிவிகையலங்கரித்தார் தாம்பாளத்திலேபிள்ளையைவை
எங்குமரியபறையடித்தார் எடுத்துத்தூதர்நடக்கலுற்றார் [த்தார்
ஆயிரஞ்சோதிடர்நடந்துஅழுக ஆணும்பெண்ணுமாய்குடிகளழுக
ஐயா-ஊரைத்தாண்டிவழியும்விட்டார் உடனேதூதர்நடந்துவிட்டார்
கரியவனத்தில்வளத்திவிட்டார் மடியசேதியுரைக்கவந்தார்
ஐயா-பெற்றமகனைமறந்துபோட்டார் செத்தாப்போலேஅழுதுவிட்
(தெம்மாங்கு)அரியவனங்குடியிருக்கும் ஐந்துதலைநாகமது [டார்
பிரியமோடுபாலகனை பெற்றவள்போறகார்க்குதையா
படத்தைவிரித்துகுடையாயபிடிக்கும் பதரியழுதாலமுர்தங்கொடுக்
கட்டிபிடித்துஅணைத்துபடுக்கும் கண்டுகளிக்கநடனம்புரியும்[கும்
ஐயா-மதனைபோலஅழகுதுலங்க மந்திரவாளுங்கையிலபிடிக்க
ரதிகள்போலசிறைகளெடுக்க ராஜமன்னனைவெட்டிஜெயிக்க
என்று-வரத்தைகொடுத்துவளர்த்துவருது கதிர்படாமல்குடைபிடி
(தெம்மாங்கு) பிள்ளையில்லாமலடி பட்டைவெட்டுமாதிகச்சி [க்குது
துள்ளியழுங்குரல்கேட்டு துடித்தல்லவாஓடிவந்தாள் (நன்)
ஐயா-சங்கதட்டிலேபிள்ளையைகண்டாள் தாவிஎடுத்துமுத்தமிட்டா
கொங்கைமலர்ந்துஅமுர்தங்கொடுத்துகுழந்தையெடுத்துஓடிவருவாள்
ஆருடபிள்ளையோவென்றுநினைப்பா ஆதிசிவனைமனதிலெண்ணுவாள்
ஐயா-காடுகடந்தாள்கடுகநடந்தாள் ஓடிவந்தாள்ஊரைசேர்ந்தாள்(ந)
(தெம்)பட்டைவெட்டப்போனதொரு பத்தினியைக்காணமென்று
வாட்டமாகதடியெடுத்து காட்டுவழியேதேடிவாரான் (நன்)
ஐயா-வருகமனைவியெதிரில்கண்டான்வந்தின்னேரமேண்டியென்றான்
அடிக்கதடியைநோக்கிபிடித்தான் அவளும்பயந்துமகனைகொடுத்தா
கண்டுமகிழ்ந்துகருத்துங்குளிர்ந்து தொண்டுபுரிந்துதூக்கியணைத்து
அண்டர்செய்போலதோற்றுதென்றான் அரியவிபரங்கூறுமென்றான்
சட்டைவெட்டிடப்பார்த்தகாட்டில் தட்டில்கண்டதைகட்டிவந்தேன்

(தெம்மாங்கு)தங்கச்சருவையிலே தானிருந்தபிள்ளையர்க்கு
சிங்காரமாய்த்தொட்டிலிட்டு சித்திரம்போல்வளர்த்துவாரூர்(ந)
ஐயா-ஆசைமீறிவளர்த்துவருவான் அழகுமதுரைவீரனென்பான்
காசிஜெனங்கள்பார்த்துபார்த்து கதிரவன்போல்விளங்குதென்பார்
சிலர்மன்னர்போலயிருக்குதென்பார்மாதிகநெப்படிவளர்ப்பானென்
யின்னம்பலவாய்குடிகள்சொல்வார் எல்லாமாதிகன்காதில்கொள்வா
ஐயா-கேட்டுபயந்துநடிங்கிவிட்டான் காசியைதாண்டிஓட்டமிட்டா
(தெம்)பொம்மண்கோட்டையிலே போய்புகுந்துமாதிகனும் [ன்
உம்மிடத்தில்சேருவனுய் ஊழியங்கள்தாருமென்றான் (நன்)
உடனே-சேவகமமர்ந்தான் செழிப்பாயிருந்தான் (நன்)
(தெம்மாங்கு)சிந்தையுங்களித்துசின்னான் செழிப்பாயிருக்கையிலே
விந்தையாகவீரனுக்கு வேடிக்கையாயலங்கரித்தான் (நன்)
அவர்காதில்கடுக்கன்சோதிமின்ன கையிலகாப்புகண்ணைபறிக்க
முருக்குமீசையும்முகத்தின்காந்தியும்முடித்தசுங்கிலேமோககந்நியும்
வலதுசுங்கிலேவாழமாலும் இடதுசுங்கிலேயேமனெழுத்தும்
அடுக்காய்பூட்டினர்ஆசைநீட்டினர் கடுக்கன்பூட்டினர்கலியைஓட்டி
(தெம்)பொம்மணநாய்க்கன்மகள் புத்திரியாள்பொம்மியரும் [னர்
நன்மையானசேதிதன்னை நாய்க்கனுமறிந்திட்டானே (நன்)
ஐயா-ஊருக்கடுத்தஒருகல்தூரம் மேற்குதிசையில்மேலானயிடத்தில்
பச்சைபந்தல்பாங்காயமைத்துபத்திபொம்மிஎவைத்துமேவிடுத்தா
காவல்-மாதிகசின்னானை மன்னநழைத்து மங்கைக்குகாவல்தங்கநேமி
காவல்தன்னிலேகபடுவாராமல்கார்க்கபத்திரம்கட்டளையிட்டா[த்து
ஐயா-பத்திரங்காவல்பார்த்துவாருங்கள் நித்தமுங்காவல்நின்றுயிரு
(தெ)சின்னானும்பொம்மிகாவல் சீருடனேகார்த்திருக்க [ங்கள்
உன்னிதமாய்க்காத்துமழை ஒங்கியேயடிக்குதையா (நன்)
காவல்தப்புதேககருக்கலாச்சுதே யிடியிடிக்குதேதயிருண்டுபோச்சுதே
ஆக்கினைவருமென்றலறலாச்சுதே ஆதிசிவனைநினைக்கலாச்சுதே
அடி-ஆனைபதிலுக்கனுப்புவேண்டி அரசனறிந்தால்பழுதுவருண்டி
ஜீவனங்கள் அழியுமோடி சிரசைவாங்கனேமிப்பாண்டி
அடி-பிள்ளையிருந்தும்உதவவில்லையே பெரியதுணையும்வேறேயில்லை
(தெம்மாங்கு) யிள்ளையிருக்க பெற்றவர்க்குயேன்விசனம்
கள்ளமில்லாபொம்மிகாவல் காளைமுத்துபோறேனையா
ஐயா-பாசுபந்துடன்பதக்கங்கட்டி பட்டுவஸ்திரம்அங்கிபூட்டி
சத்தியுங்கேடயங்கையில்பிடித்து வெத்திலைபாக்குவேணதெடுத்து
மதுரை அண்டம்நடுங்கஓடிவந்தானழகுபொம்மிகாவல்சேர்ந்தான் ந
(தெம்மாங்கு)பச்சையென்றபந்தலிலே பாங்குடனேவீரமுத்து
கச்சையோடுநிற்கையிலே கண்டிட்டாளேபொம்மிதானும்(நன்)
அடடா-காவல்கார்க்கவந்ததாறு ஊரும்பேரும்உடனேகூறு (நன்)
(தெம்மாங்கு)மாதிகன்பெற்றெடுத்த மதுரைமுத்துவீரனடி
சோயாதியுன்காவலுக்கு பாதுகாக்கவந்தனடி (நன்னு)
அடியே-காவல்காரண்டி கனத்தவீரண்டி (நன்னு)
(தெம்மாங்கு)பத்திரங்காவலென்று பைங்கிளியாள்படல்சாத்தி
உத்தமிபுங்கட்டில்மீது உரங்கிநித்திரைசெய்திட்டாளே (நன்)

அப்போ-அத்தனைநினைந்தாள் நித்திரைபுரிந்தாள் (நன்று)
(தெம்மாங்கு)கருக்கலிடிமின்னலிலே காத்துமழைவீசையிலே
ஒருத்தியுமாய்படுக்கவேண்டாம்உனக்குதுணையாய்வாரனடி (நன்)
அடி-அன்னக்கிளியெ அழகுபொம்மியெ ஆசைக்கேத்த அமுர் தக்கிளியே
என்னைத்தனியேவிட்டுமெத்தைமேல் ஏகிப்படுக்கனாயமாகுமோ
அடிக்குமழையில்பொருக்கனடி அண்டையில்கொஞ்சமிடமுந்தாடி
குடிசைக்குள்ளவாரனடி கொஞ்சினமுமிருக்கலாண்டி
அடியே-குற்றமில்லடிகூடவாரண்டி சித்தமையடி சேரவாரண்டி(ந)
(தெம்மாங்கு)ஆரடாமாதிகானீ அகடாகபேசுகிறாய்
குரியாகயிப்போது குடிசைவிட்டுஓடிப்போடா (நன்று)
அடடா ஆணுவத்தாலழிந்தபயலே ஆசைகொண்டுநீபேசும்பயலே
ஜாதியில்யீனசக்கிலிப்பயலே சரசமாடநினைத்தபயலே
அடடா-காவல்கார்க்கவந்தபயலே கற்பையழிக்கநினைத்தபயலே
பிச்சைகேழ்க்கவந்தபயலே பெண்டுக்கழைத்தகதையைப்போலே
அடே-பிழைத்துஓடடாபிடரிகாரடா தப்பிஓடடா தலையைகாரடா ந
(தெம்மாங்கு) பையலென்றபோதே பதைக்குதடியென்மனது
தையலேயுன்விரகம் தாளமுடிபோகலியே (நன்)
அடி-தலையைவெட்டிதரித்திட்டாலும்தக்கவாக்கினைபுரிந்திட்டாலும்
உயிர்க்கழுவிலேஏத்திட்டாலும் உலகம்பெரண்டுஎதிர்த்திட்டாலும்
நான்-விட்டுப்போகண்டிவிரகம்தீரடிகட்டியென்னுடன்கலந்துபேசடி
காமன்கணையைதுரத்திவோட்டடி காளைமுத்துகவலைதீரடி
அடி-தொட்டியன்மகளே துலங்கும்ரதிஎ கட்டிக்கரும்பேகாமநிதியே
(தெம்) பொம்மண்ன்சீமைபிது பிழைமோசம்நேருமோடா
உம்முடையமனையிற்சென்று உறவிருந்தால்கூடுபோடா (நன்)
அடடா-சக்கட்டங்கள்படிக்கவேண்டா சரசமாடநினைக்கவேண்டாம்
வம்புதும்புகள்வளரவேண்டாம் வாய்மதத்தினால் அழியவேண்டாம்
ஆசைகொண்டுநீபேசவேண்டாம் ஆக்கினைவந்தபின் அலரவேண்டாம்
பேசாமல்போய்வீடுசேரும் பெண்டுபிள்ளையின்முகத்தைப்பாரும்(ந)
(பொது-விருத்தம்)இருவருந்தர்க்கமாடி யிருந்திடும்போதுமப்போ
அரிவையாம்பொம்மியாரும் அழுதுமேபுலம்பும்போது
மதுரையாம்வீரனென்னும் மன்னன் அருகிலோடி
சதுருடன்மங்கைதன்னைச் சரசமாய்துடைத்திட்டானே.
(தெம்மாங்கு)தலையிலெழுதினது தப்பாதுயென்றுசொல்லும்
பழமொழிபோல்யிந்தவிதி பலித்துதையாஎந்தனுக்கு (நன்)
ஐயா-யிட்டவிதியோ ஈசன்செயலோ (நன்)
(தெம்)விதிஉனக்குயென்னபெண்ணே வீரமுத்துநானிருக்க
மதிமுகத்துபொம்மியரே மனவருத்தம்வையாதடி (நன்று)
மங்கையைதழுவிமாரோடணைத்தான்மண்டிபோட்டுமடிமேல்குந்தினான், ஏங்கியழுகும்கண்ணைதுடைத்தான்யிசைந்தவாயில்முத்தங்கொடுத்தான், அடியே-காசிராஜன்பெற்றவீரண்டி காளைமகிமைகண்டுகொள்ளடி, மாதிகனென்று மயங்கிடாதடி மண்டலமாளபிறந்தபிள்ளடி.
வீரன் மங்கையைபிடித்தான் மாரோடணைத்தான்
என்றுசெங்கையைத்தொடுத்தான் சேர்த்துபிடித்தான்

(தெம்)மங்கையருங்கண்விழித்து மதுரைமுகம்பார்த்தவுடன்
எங்குமில்லாவானந்தங்கொண் டிருபுஜமும்பூரித்தாளே (நன்)
இவர்-ஆதிசிவனே அழகுமதனே (நன்)
(தெம்)காளைமுத்துவீரனுக்கு காமமதுகண்ணிருண்டு
கோலமுடன்பொம்மியரை கூசாமல்பேசினனே (நன்)
மங்கையைதழுவிமாரோடணைத்தான் மலரும்பஞ்சணைமீதில்படுத்தா
மதனும்ரதிபோல்மனமுங்களித்தார் மருவிக்காமம்விரகந்தீர்ந்தான்
கந்தர்வள்ளிபோல்கலந்துசுகித்தார் காமன்கணையைதுரத்தியடித்தா
வீரன்-முத்தங்கொடுத்தான் முகத்தோடணைத்தான்
சித்தங்களித்தான் சேர்ந்துயிருந்தான்(நன்)
(தெம்)பொழுதுவிடிந்தவுடன் போய்தகப்பன் அண்டையிலே
பழுதுவொன்றும்நேருமலே பத்திரமாய்க்கார்த்தேனையா (நன்)
ஐயா-நித்தமுங்காவல் நானேபோகிறேன்
(தெம்மா)பத்திரமாய்கார்த்தேனென்று பாலனுரைத்திடவே
சித்தமதுகளித்தல்லவா சீக்கிரம்போடாவென்றான் (நன்)
அடடா-பொழுதுபோனல் பழுதுவருமே (நன்)
(தெம்மா)அன்றுபொழுதுசென்று அந்திநேரமானவுடன்
வந்துநின்றானப்பொழுது வாழும்பொம்மிகாவலுக்கு (நன்)
அப்போபார்த்தவர்மயங்க பதுமைச்சிலைபோல் (நன்)
(தெம்)கண்டவுடன்பொம்மியரும் காதல்கொண்டுவீரயன்மேல்
தெண்டனிட்டுகுடிசைக்குள்ளே தானழைத்தாளப்போது
அடடா-ஆசைதுரையே அழகுமதனே (நன்)
(தெம்மா) அழைத்தவுடன்வீரையனு மரிவையர்க்குமேதுரைப்பான்
செழித்துமிகவாழ்ந்திருக்க கழுத்தில்தாலிகட்டுரெண்டி (நன்)
அடியே-தாலிகட்டினல் தனழைத்துவாழலாம் (நன்)
(தெம்மா)மங்கையர்க்குதாலிகட்ட மன்மதரோவந்தீரையா
எங்களம்மான்யிதையறிந்தாள் யிருதுண்டமாய்வெட்டுவாரோ
ஐயா-தகப்பனரிந்தாள் தலையேபோய்விடும் (நன்)
(தெம்மா)எதுக்குமஞ்சாதே யிளங்கொடியேபெண்மயிலே
வாதுவந்தால்வீரமுத்து வாட்டுரெண்டிவாளாலே (நன்)
அடியே-ஆதிசிவனும் அயனுமரிய அகிலமளந்த அரியுமரிய
சத்தியரிய சாமியரிய சண்முகனோடு கணேசனரிய (நன்)
யின்னஞ்சந்திரசூரியர்சகலரறிய சாற்றுமுக்கோடிமும்மூர்த்திகளறி
சித்தரறியசேடனறிய சத்தகன்னிகள்பக்தரறிய[ய
மஞ்சள்நூலில்தாலியைக்கோர்த்து மகிழ்ந்துகற்பூரதீபங்கொடுத்து
செங்கையினல்தேவரைவேண்டி மங்கைகழுத்தில்தாலியைத்தரித்தா
அப்போ-அந்திரதேவர்வந்துமேவாழ்த்த ஆனந்தபுஷ்பமாரிகள்பொ
(தெம்மா) முப்பதுநாளும்முடிந்துதையாநாளையோடு [ழிய
எப்படிநான்உன்னைவிட்டு ஏகுவேனரண்மனைக்கு (நன்)
அய்யாபொழுதுவிடிந்தால் பொம்மணர்வருவார் (நன்)
(தெம்மாங்கு)ஆசைக்கிளியேயென்தன் அழகுரதிபொம்மியரே
நேசமாமருதேசம் நடக்கலாண்டிஇருவருமாய் (நன்)

அடி-வஞ்சிக்கொடியே வாழும்பதியே
(விருத்தம்)செப்பியபடியேதிங்கள் சென்றபின்பொம்மிமாதை
கொப்பென தீர்த்தமாடி கோலமாய்பணிகள்பூட்டி
வர்ப்புதவரிசையோடு வாத்தியம்மிகவேகொட்டி
கர்ப்படன்வீட்டுக்குள்ளே களிப்புடனழைத்திட்டாரே.
(மதுரைபொம்மண்ணன்காவலைமாற்றி பொம்மியை சிறையெடுத்தல்)
(தெம்)தட்டிவரிந்துகட்டி தனுக்காக அலங்கரித்து
தொட்டியனூர்மாளிதேடி துரைமதுரைவந்துநின்றான் (நன்)
அப்புகெந்துடன்குப்புகெந்துமாய் அநுமார்லகுவை அழகாயெடுத்து
பத்துகட்டையும்தாண்டிகுதித்துபடுக்கும்பொம்மிவாசல்மிதித்தான்
உருவிகத்தியை தலையில்வைத்து உத்தமன்பொம்மணன்நித்திரைசெய்ய
கண்டுமதுரைகாளியைநினைத்துகடுகயீயைப்போல்வுருவமெடுத்தான்
பரந்துபிரப்பில்பாய்ந்துபுகுந்து பத்தினிபொம்மியைதட்டியெழுப்ப
ஆசைக்கிளியும்அலரியெழுந்தா ளன்புடன்மதுரைமுகம்பார்த்தாள்
கையைப்பிடித்துகடுகவழைத்தாள் மெய்யைதடவிமுத்தங்கொடுத்
மதுரைவீரன்பொம்மியைசிறையெடுத்தநொண்டிச்சிந்து [தாள்
வீரையன்பரிமீதில், பொம்மியெனும்மெல்லியளைத் தூக்கிவைத்து
வல்லபமதாய்க்-காரியப்புரவியின்மேல், தானுமந்த கன்னியற்குபின்
னிருந்து உன்னிதமுடன்பஞ்சகல்யாணிபறியை, நடவென்றுபாவை
யைபிடதுகையால்மேவிபிடித்து - அஞ்சாமதுரைவீரன், கோட்டை
அறிகிலேவந்து குரடாவையெடுத்து- தந்திரத்துடனடித்தான், கோ
ட்டைமதில்தாண்டியேகுதித்து தாந்தலைப்புரவி தெற்குமுகம்நாடிப்ப
றந்து, பொம்மணன்சீமையும்பாளையப்பட்டு தேசங்கடந்துதிக்குவள
ச்சோலையும்விட்டு, கொல்லிமலை-கூடியேகருங்கால்வழி நாடிநடந்து-
கண்டோர்கள் நடுங்கிடவே, தொட்டியமும்-கடந்துமுசிரிவழிகங்கு
லிருளில்-ஆமூர்வழியாக, காவேரியாற்றில் வந்திறங்கி கூடாரமடித்
து-தாமிருபேருமிருந்து, பலகாரம்சாப்பிட்டிளைப்பாறி முத்துசாமி
வீரையன்-யிளமயில்பொம்மியுடனே, கலவியில்-யேகாந்தமாகவே யி
ருக்கையிலே அலைகதிரோனுதித்தான், அப்போ-அலண்டுபொம்மண
ன்விழித்தெழுந்தனனே. (தந்தின தன தனனம்)
(வ-ம்) இப்படி அலண்டெழுந்துமேதடிவீரன்கொண்டுபோனானென்ற
றிந்து ஆமூர் ஆற்றங்கரையில்வந்து தண்டுடன் யுத்தஞ்செய்தல்.
(தெம்)அணிதலைவீரரெல்லாம் ஆணிமுத்துவீரையன்மேல்
சோனைமாரிபோல்தொடுத்து சுத்தவீரரெதிர்த்திட்டாரே(நன்)
அப்போ-கத்தியைபிடித்தார் காவலர்யெதிர்த்தார் (நன்)
-தெம்மா- பட்டாவைகைபிடித்து பஞ்சகல்யாணியேறி
தொட்டியர்கள்சேனையெல்லாந் துள்ளதுள்ளவெட்டுறானே -ந-
பதைத்தபேரைமிதித்துவெட்டுவான்பதுங்கினோரைஒதிக்கிதள்ளுவா
தூக்கிபோட்டுபட்டாபிடிப்பான் தூரத்திதூரத்திதெரித்துவெட்டுவா
மூலபலங்களொழிந்தாப்போல மூச்சிவிடுமுன்சாச்சிபோட்டான்
பொம்மணன்சிரசைபிடித்துவெட்டி போர்களத்தைவேரோடறுத்து
எதிரிலிருந்தால்வாங்களென்றான் எட்டுதிசையும்திரும்பிபார்த்தான்

கத்திஎடுத்துகழுவிபிடித்து பத்தினிபொம்மியின்பக்கமடுத்தான்
(தெம்)பாவிமகள்பெண்ணாலே படுகளத்தில்மாண்டரோ
தாவியேபொம்மியரும் தானழுதழுடிவாராள் (நன்)
வந்துபார்த்தாள் தந்தைமுகத்தை வாரியெடுத்துமாரோடணைத்தாள்
எந்தனாலேஉந்தனுயிரும் எரக்கப்பிரமன் அளித்தவிதியோஎன்று
ஏங்கியழுதாள் இருகண்சிவந்தாள் மிடித்துமோதி அடித்துவிழுந்தாள்
பாரைமோதிபதறியழுதாள் பத்தினிபொம்மியுங்கோபமாகினாள்
அலறியழுகுப்பொம்மியைதேற்றி அன்பாய்மதுரை அட்சணம்ஓடி
பொங்கமாய்சந்தனகட்டையினாலே பொம்மணநாய்க்கனை தகனஞ்செய்தான், வைகையாற்றிலேஸ்தானமுஞ்செய்தார் வந்துஅன்னமும்உண்டுகளித்தார்

(மதுரை விஜயரங்கனிடம் சேவகமமர்தல் விருத்தம்)
ஆமுனைவிட்டுவீரன் அன்புடன்பயணமாகி
சேமமாய்விஜயரங்கன் சீமையில்வந்துதானும்
மேவியராசன்கேழ்க்க மெல்லெனவுரைத்துவீரன்
சேவகமமர்ந்துமப்போ செழிப்புடன்வாழ்ந்திட்டானே
(மதுரை திருமலைநாய்க்கனைக்காணுதல் தெம்மாங்கு)
திருமலைநாயகரை தெண்டமிட்டுவீரையனும்
கருவறுக்ககள்ளர்குலம் காலைமுத்துவந்தானென்றான் (நன்)
(தெம்மாங்கு) நல்லதென்று திருமலை நாயகருமப்பொழுது
வுல்லாசமாயன்னமிட்டு விட்டாரேவிடுதியொன்று (நன்)
ஐயா-விஜயரங்கர் விட்டசேவகன் (நன்)
(விருத்தம்) மன்னவனுரைத்தவாறே மதுரைநல்வீரன்தானும்
வுன்னிதசொக்கர்கோயில் வுத்தமன்கிதமும்போற்றி
தன்மையாயிருக்கும்போது தாட்டிகமானகள்ளர
வுன்னிதமாககொள்ளை ஒட்டுமூர்வூரிற்றானே.

நொண்டிச்சிந்து.

கள்ளர்மிகப்பிரண்டு, வருவதை-கண்டுவிட்டான்வீரன் செண்டதுபோல்-அண்டத்தளாவும்புரவி, தன்னை-அதட்டிப்பிடித்தயேறி நடத்திக்கொண்டே-புகுந்தான் கள்ளர்படையில்,இந்த-பூமியொடு அண்டரண்டம் வெடித்ததுபோல்- பளபளவென்று, தலைகளை-பறக்கடித்தான் உயிர்மறக்கடித்தான்-கரகரகரவென்று நாராயணன்- கரத்தின்சக்கரம்போல் அறுத்தெறிந்தான் - படபடபடவென்று, ராமன்-சண்டையிலே ஏடலபலம்உருண்டதுபோல் வெட்டிவெட்டி குவித்துவிட்டான், வரொங்கும்ரத்தவெள்ளங்கண்டல்லவாசிரித்துவிட்டான்
(தெம்மாங்கு)கள்ளர்குலமறுத்து காலைமுத்துவீரையனும்
வெள்ளையம்மாள்விடுதியண்டைவந்துநின்றாநடுராவில் (நன்)
மதுரை-மதிலேயேறி மன்னன்குதித்தான் (நன்)
(தெம்) அங்கயற்கண்ணம்மனுக்கு அடிபணியும் வெள்ளையம்மாள்
தூங்குமஞ்சக்கட்டிலிலே துலங்கநித்திரைசெய்திட்டாளே (ந)
அப்போ-பத்தினிவெள்ளை நித்திரைசெய்கிறாள் (நன்)
(தெம்)தட்டியெழுப்பினைக்கால் தையலர்க்குகோபமென்று
தப்பட்டிடையைபோட்டல்லவா தூக்கிவைததான்வெள்ளையனை(ந)

அ மதுரைவீர அலங்காரம்.

தூங்கும்வெள்ளையைதூக்கிமதுரை துப்பட்டிமீதுதுலங்கவளர்த்தி
ஆசையாகவேயெடுத்துக்கட்டியே அலங்கமதிலேதாண்டிகுதித்தான்
அங்கேகண்டுகோவலர்மடக்கிகேழ்க்க காளைவீரன்கலங்கிநிர்க்க
ஓடிராசன்முன்சேதியுரைக்க உடனேகட்டிவருகஉரைக்க[க
மடக்கிராசன்முன்விடுக்கவீரனை மன்னவன்மூட்டையவிழ்த்துபார்க்
அழகுவெள்ளையையதிலேகண்டு ஆக்கினைதிருமலைநாய்க்கனளித்தார்
வீரனைகொண்டுபோய்விடுகசொன்னார் மாறுகைகாலையறுக்கசொன்ன
விருத்தம்-மன்னவன்வுரைத்தவாரே மதுரையைகைகால்வாங்கி [ர்
சொன்னசொற்படியேசெய்து தூதர்கள்மீன்றிருக்க
வுன்னிதவெள்ளையாரும் உத்தமிநித்திரைநீங்கி
மன்னவன்முகத்தைப்பார்த்து மங்கையுங்கூறுவாளே.
(தெம்)பத்தினிமேலாசைகொண்டு பாவையரைக்கன்னமிட்டாய்
வுத்தமரோயெந்தனுக்கு பத்தாவேநீருமையா (நன்)
ஐயா-உயிரும்நீரோ உடலும்நானே (நன்)
(தெம்)வீரனென்றுஅறியாமலே வெட்டிவிட்டோம்கைகாலென்று
கூறியே அடிவணங்கி கோடுகோடென்றழுகுரரோ (நன்)
அடடா-முந்திகொய்தோமே மோசம்போனமே (நன்)
(தெம்மா- அந்தமுள்ளபொம்மியரும் அன்னம்போலநடைநடந்து
வந்துவீரன்முகத்தைப்பார்த்து சிந்தையுங்கலங்கினளே (நன்)
என்னசெய்வேன்என்கணவா ஏதுமறியேன்சூதுந்தெரியேன்
வந்தவிதியின்வயணமறியேன் வாங்கும்கைகால்மருமமறியேன்
பாவியெண்ணம்பதராய்போச்சு பற்றிவந்துநான்வீணிலாச்சு
உந்தன்வீரம்எங்கேபோச்சு உன்னைஜெயிக்களவராலாச்சு
என்று-ஓங்கிமண்மேல்வுருண்டுஅழுதா ஏங்கிமண்மேலிருந்துயருதா
(தெம்)ஆதியிலேஎந்தனுக்கு அளித்தவிதிதவருமோடி [ள்
கோதையரோஉந்தனுக்கு கூறுகிறேன்பெண்மயிலே நன்)
அடியே-ஆதிசிவனும்அயனுமாலும் கூடிதலையில்குறித்தவிதியும்
மேதினிதனில்விட்டுபோகுமோ மெல்லியேவிம்மியழுதால்தீருமோ
சூரியகுலத்தில்பிறந்தவண்டி மாறுபடாதவம்மிசக்கரண்டி
பொம்மிஎன்வுயிர்புவியில்வைக்கண்டி அம்மைமீனாக்ஷியடியைசேர்
என்று-அட்சணம்வுரைத்தான் அம்மையைதுதித்தான் [வண்டி
பட்சமாய்வகுத்தான் பாவையர்க்குரைத்தான் (நன்)
(தெம்மாங்கு) வெள்ளையரும்நாய்க்கரிடம் வேகமுடன்ஓடிவந்து
கள்ளனென்றுவீரமுத்தைக் கைகாலும்வாங்கிவிட்டீர் (நன்)
என்று-ஓங்கியழுதாள் உறைத்துத்தொழுதாள் (நன்)
(தெம்மாங்கு) சேதியைகேட்டவுடன் திருமலைநாய்க்கருந்தான்
மோதியேவிழுந்தழுது மூர்ச்சைகொண்டுஓடிவாரார் (நன்)
அப்போ-கண்டுநாய்க்கன் கதறியழுதான் (நன்)
விருத்தம்-வாங்கியகைகளெல்லாம் வளர்ந்ததைப்பார்த்துமாதர்
ஓங்கியதீயிற்பாய உடனதன்கிரிகைச்செயது
பாங்கெனஉயிரைமீனாள் பாதத்தில்விட்டுவீரன்
தீங்கிலாக்காவல்கார்த்து தினம்பூசைவாங்கிவாரூர்.

---